ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 7.9 – கள்ளம் மனம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 7.9 – கள்ளம் மனம்

‡ கள்ளம் மனம் விள்ளும் வகை ⋆
கருதிக் கழல் தொழுவீர் ⋆
வெள்ளம் முது பரவைத் ⋆
திரை விரிய ⋆
கரை எங்கும் தெள்ளும் மணி திகழும் ⋆
சிறு புலியூர்ச் சலசயனத் துள்ளும் ⋆
எனதுள்ளத்துள்ளும் ⋆
உறைவாரை உள்ளீரே ‖ **7.9.1** ‖

தெருவில் திரி சிறு நோன்பியர் ⋆
செஞ்சோற்றொடு கஞ்சி மருவி ⋆
பிரிந்தவர் வாய் மொழி ⋆
மதியாது வந்தடைவீர் ⋆
திருவிற் பொலி மறையோர் ⋆
சிறு புலியூர்ச் சலசயனத்து ⋆
உருவக் குறள் அடிகள் ⋆
அடி உணர்மின் உணர்வீரே ‖ **7.9.2** ‖

பறையும் வினை தொழுதுய்மின் நீர் ⋆
பணியும் சிறு தொண்டீர் ! ⋆
அறையும் புனல் ஒரு பால் ⋆
வயல் ஒரு பால் பொழில் ஒரு பால் ⋆
சிறை வண்டின மறையும் ⋆

சிறு புலியூர்ச் சலசயனத்துறையும் ⋆
இறை அடி அல்லது ⋆
ஒன்றிறையும் அறியேனே ॥ **7.9.3** ॥

வானார் மதி பொதியும் சடை ⋆
மழுவாளியொடொரு பால் ⋆
தான் ஆகிய தலைவன் அவன் ⋆
அமரர்க்கதிபதியாம் ⋆
தேனார் பொழில் தழுவும் ⋆
சிறு புலியூர்ச் சலசயனத்தான் ஆயனது ⋆
அடி அல்லது ⋆
ஒன்றறியேன் அடியேனே ॥ **7.9.4** ॥

நந்தா நெடு நரகத்திடை ⋆
நணுகா வகை ⋆
நாளும் எந்தாய் ! என ⋆
இமையோர் தொழுதேத்தும் இடம் ⋆
எறி நீர்ச் செந்தாமரை மலரும் ⋆
சிறு புலியூர்ச் சலசயனத்து ⋆
அந்தாமரை அடியாய் ! ⋆
உனதடியேற்கருள் புரியே ॥ **7.9.5** ॥

முழு நீலமும் மலர் ஆம்பலும் ⋆
அரவிந்தமும் விரவி ⋆
கழுநீரொடு மடவார் அவர் ⋆
கண் வாய் முக மலரும் ⋆
செழு நீர் வயல் தழுவும் ⋆
சிறு புலியூர்ச் சலசயனம் ⋆

தொழுநீர்மை அதுடையார் ⋆
அடி தொழுவார் துயரிலரே ॥ **7.9.6** ॥

‡ சேய் ஓங்கு தண் ⋆
திருமாலிருஞ்சோலை மலை உறையும் மாயா ⋆
எனக்குரையாய் இது ⋆
மறை நான்கின் உளாயோ ⋆
தீயோம் புகை மறையோர் ⋆
சிறு புலியூர்ச் சலசயனத்தாயோ ⋆
உனதடியார் மனத்தாயோ ⋆
அறியேனே ॥ **7.9.7** ॥

மையார் வரி நீலம் ⋆
மலர்க் கண்ணார் மனம் விட்டிட்டு ⋆
உய்வான் உன கழலே ⋆
தொழுதெழுவேன் ⋆
கிளி மடவார் செவ்வாய் மொழி பயிலும் ⋆
சிறு புலியூர்ச் சலசயனத்து ⋆
ஐவாய் அரவணை மேல் ⋆
உறை அமலா ! அருளாயே ॥ **7.9.8** ॥

‡ கருமா முகில் உருவா ! ⋆
கனல் உருவா ! புனல் உருவா ⋆
பெருமால் வரை உருவா ! ⋆
பிற உருவா ! நினதுருவா ! ⋆
திருமா மகள் மருவும் ⋆
சிறு புலியூர்ச் சலசயனத்து ⋆

அருமா கடல் அமுதே !⋆
உனதடியே சரணாமே ‖ **7.9.9** ‖

‡ சீரார் நெடு மறுகில்⋆
சிறு புலியூர்ச் சலசயனத்து⋆
ஏரார் முகில் வண்ணன் தனை⋆
இமையோர் பெருமானை⋆
காரார் வயல் மங்கைக்கிறை⋆
கலியன் ஒலி மாலை⋆
பாரார் இவை பரவித் தொழப்⋆
பாவம் பயிலாவே ‖ **7.9.10** ‖

அடிவரவு — கள்ளம் தெருவில் பறையும் வான் நந்தா முழு சேயோங்கு மையார் கரு சீரார் பெரும்புறம்

கள்ளம் மனம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்